செய்தி வெளியீட்டு எண்–939 நாள்–5.12.2009

# செய்தி வெளியீடு

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தொடர்பான பணிகள் குறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு

சென்னையில் கட்டப்பட்டு வரும் மேம்பாலங்கள், சுரங்க நடைபாதைகள் மற்றும் பூங்காக்கள் பணிகள், அடையார் பூங்காவின் பணிகள், மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் நிறைவேற்றப்பட்டு வரும் கடல் நீரை குடிநீராக்கும் திட்டப் பணிகள், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் ஆகியவற்றின் பணி முன்னேற்றம் குறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (5.12.1009) தலைமைச் செயலகத்தில்ஆய்வு மேற்கொண்டார்.

பணிகளின் தற்போதைய நிலை, நிதிப்பயன்பாடு குறித்து தனித்தனியாக ஆய்வு மேற்கொண்ட துணை முதலமைச்சர் அனைத்து திட்டங்களையும், குறித்த காலக்கெடுவிற்குள் முழுமையாக நிறைவேற்றி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் இடர்பாடுகளை களைவது குறித்தும் இக்கூட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. திட்டத்தினை தடையின்றி நிறைவேற்றவும், தடையற்ற மின்வினியோகம் வழங்குவது தொடர்பாகவும் அதிகாரிகளுக்கு உரிய அறிவுரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் சென்னை மின்சார வாரிய தலைவர் திரு.சி.பி.சிங், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகத் துறை செயலாளர் டாக்டர்.நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ஸ்வரன்சிங், இ.ஆ.ப., இணை மேலாண்மை இயக்குநர் திரு.பங்கஜ்குமார் பன்சால், இ.ஆ.ப., டுபிசல் மேலாண்மை இயக்குநர் திரு.பனீந்தர்ரெட்டி, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., பேரூராட்சிகள் துறை இயக்குநர் திரு.ராஜேந்திரன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.சிவதாஸ் மீனா, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் டாக்டர். செந்தில்குமார், இ.ஆ.ப., இணை ஆணையர் திரு.ஆஷிஷ்சட்டர்ஜி, இ.ஆ.ப., மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துக் கொண்டனர்.

* * * * * * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, செ–9.